வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 21.06.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 173 பக்கங்கள் : 12

## தமிழ் பொது வேட்பாளர் விவகாரம்

# ஜெய்சங்கர் முன்பாகவும் இரண்டுபட்டது தமிழ் அரசு

கொழும்பு, ஜூன் 21

**தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் முன்பாகவும் தமிழ் அரசு கட்சி இரண்டுபட்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.**

நேற்று இலங்கை வந்த இந்திய வெளி விவகார அமைச்சர் சுப்பிர மணியம் ஜெய்சங்கர் பாராளு மன்றத்தை பிரதி நிதித்து வம் செய்யும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதி நிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் 11



## இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் திடீர் வருகையில் சந்தேகம்!

### சபையில் குறிப்பிட்டார் விமல்

கொழும்பு, ஜூன் 21

இலங்கை ஆட்பதிவு திணைக்களத்தின் தரவு கட்டமைப்புக்களை, இந்திய அரசாங்கத்திற்கு வழங்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று சபையில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு 11

## சஜித்தை சந்தித்த ஜெய்சங்கர்

கொழும்பு, ஜூன் 21

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அண்டைய நாடான இந்தியாவிடம் இருந்து கிடைத்த உதவிகள் மற்றும் ஒத்தாசைகளுக்கு நன்றி 11

## தமிழ் தலைவர்கள் சொன்னவற்றை மட்டும் கேட்டுச்சென்ற ஜெய்சங்கர்!

கொழும்பு, ஜூன் 20

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் எந்தவிதமான கருத்துகளையோ அல்லது உறுதிமொழிகளையோ வழங்கவில்லை என்று தெரியவருகின்றது.

கொழும்பு இந்திய இல்லத்தில் 11





வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவில்...!

(மேலும் படங்கள் பக்கம் 6இல்)

## இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரம் காக்கப்படவேண்டும்

### இணை அனுசரணை நாடுகள் வலியுறுத்து



ஜெனிவா, ஜூன் 21

இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 56 ஆவது அமர்வில் கனடா, மலாவி, 11

## யார் ஜனாதிபதியாக வந்தாலும் ஆபத்து!

### அச்சம் வெளியிடுகிறார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 21

தற்போதைய தவறான பொருளாதாரக் கொள்கையால் அடுத்து யார் ஜனாதிபதி பதவிக்கு வந்தாலும் குறுகிய காலப்பகுதிக்குள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க நேரிடும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார். 11

## ரணில் - அநுர தரப்பு இரகசியச் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 21

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் பாராளுமன்றத்தில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன மற்றும் விஜித ஹேரத் 11

## ஜனாதிபதித் தேர்தல் உரியவாறு நடக்கும்!

### ராஜிதவிடம் ரணில் உறுதி

கொழும்பு, ஜூன் 21

சர்வஜன வாக்கெடுப்புமூலம் தேர்தலை ஒத்திவைக்கும் எவ்வித எண்ணமும் இல்லை என ஜனாதிபதி என்னிடம் உறுதிப்படுத்தினார். எனவே, உரிய வகையில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். 11

## நெடுந்தீவில் இளைஞர் அடித்துக் கொலை!

யாழ்ப்பாணம், ஜூன் 21

இரு குழுக்களிடையே ஏற்பட்ட தர்க்கம் மோதலில் முடிந்ததில் இளைஞர் ஒருவர் அடித்தும் கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்டும் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை நெடுந்தீவு-7ஆம் வட்டாரத்தில் இடம்பெற்ற 11

## பிரதான வேட்பாளர்கள் 13 ஐ ஏற்பதால் மாகாணத் தேர்தலை உடனே நடத்துக!

### சபையில் கோரினார் சித்தார்த்தன் எம்.பி.

கொழும்பு, ஜூன் 21

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள 3 பிரதான வேட்பாளர்களும், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளதால், உடனடியாக மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது 11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இந்திய பிரதமர் மோடி மூன்றாவது தடவையாக பிரதமராக பதவியேற்கும் நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த விஜயத்தின்போது நடந்த விடயங்கள்தான் இப்போது தெற்கில் பேசுபொருளாகியிருக்கின்றன.

அந்தப் பதவியேற்பில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில், இந்திய பிரதமரின் விசேட கவனத்தை பெற்றிருந்தார் என்று அவருடன் சென்றிருந்தவர்கள் கூறி பெருமைப்பட்டுக் கொள்கின்றனராம். எப்போதுமே மோடி நமது ஜனாதிபதியை தனக்கு அருகிலேயே இருக்குமாறு பார்த்துக்கொண்டார் என்றும் ஒரு கட்டத்தில் ஜனாதிபதி, "இந்திய மன்னர்களின் முடி சூட்டு விழாக்களுக்கு இலங்கை மன்னர்கள் தவறாது கலந்துகொண்டனர்" என்று வரலாற்று பாடமும் எடுத்திருக்கிறார்.

"உலகில் பத்தாவது இடத்தில் இருந்த இந்தியாவை ஐந்தாவது இடத்துக்கு கொண்டு வந்ததால்தான் மக்கள் என்னை மீண்டும் வெற்றி பெற வைத்தார்கள். வீழ்ந்த இலங்கையை மீட்டெடுத்ததால் நீங்களும் வெற்றி பெறுவீர்கள். வெற்றி பெற்று முதலில் இந்தியாவுக்கு விஜயம் செய்யுங்கள்" என்று இரவு விருந்தின்போது ரணிலிடம் மோடி கூறினாராம்.

"மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்ற நீங்கள் முதலாவதாக இலங்கைக்குத்தான் வரவேண்டும்" என மோடிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும்போது ரணில் தெரிவித்தார். ஆனால், இத்தாலியில் நடைபெறவுள்ள ஜி - ஏழு உச்சிமாநாட்டுக்காக போக வேண்டியிருப்பதை ஞாபகப்படுத்திய மோடி, "உங்களுக்கும் தேர்தல் அல்லவா?" என சொன்னபோது, ரணில் வழக்கம்போல சிரித்தாரே தவிர ஒன்றும் சொல்லவில்லையாம்.

இவையெல்லாம் ரணிலுக்கு உற்சாகமளிக்கின்ற விடயங்கள்தான் என்றாலும், அவரின் விஜயத்தின் பின்னர் ஒரு விடயம் மிக இரகசியமாகவே நடந்து முடிந்திருக்கின்றது.

இந்தியாவில் தேர்தல் நடைபெற்றபோது, கடைசிக் கட்ட பிரசாரங்களின்போது மோடி செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ. ) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு நாடளாவிய ரீதியில் கருத்துக்கணிப்பை நடத்தியிருக்கிறார். அந்த கருத்துக்கணிப்பில் அவர் இப்படித்தான் வெற்றிபெறுவார் என்றே முடிவு தெரிவித்திருந்ததாம். அதாவது இந்திய ஊடகங்கள் எல்லாமே, மோடி நானூறுக்கும் அதிகமான இடங்களில் வெற்றிபெறுவார் என்று தெரிவித்துக் கொண்டிருந்தபோது மோடி இரகசியமாக நடத்திய இந்த செயற்கை நுண்ணறிவு ஆய்வில், அவர் தனித்து ஆட்சியமைக்க முடியாது என்றும் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடனேயே வெற்றிபெறுவார் எனவும் தெரியவந்திருந்ததாம்.

தாயகம் திரும்பிய பின்னர், அதே நிறுவனத்தைக் கொண்டு இலங்கையில் கருத்துக் கணிப்பை நடத்தியுள்ள ஜனாதிபதி ரணில், தற்போது மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையே ஐ. ரி. என். தொலைக்காட்சியில் கடந்த ஆறாம் திகதி நடக்கவிருந்த நேரடி விவாதத்துக்கு சஜித் வருகை தராமல் புறக்கணித்ததால், சஜித்தின் செல்வாக்கில் சேதாரத்தை ஏற்படுத்திய ரணில், அந்த விவாதத்தை அநுர தரப்பு, தான் எதிர்கொண்ட தொலைக்காட்சி தொகுப்பாளர்களிடமே தோற்றுவிட்டதால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை தட்டி வீழ்த்தியிருக்கிறார் ரணில். இந்த விவாதத்தில் தனி ஆளாகக் கலந்துகொண்ட அநுரகுமார, ஐ. எம். எவ்வின் நிபந்தனைகளை கடுமையாக விமர்சித்தபோதிலும், தமது திட்டம் என்ன என்பதைத் தெரிவிக்காதது அவரையும் வீழ்ச்சியுறச் செய்திருக்கின்றதாம்.

இந்த விவாதமும் ஐ. எம். எவ்வின் மூன்றாவது கடனுதவி கிடைத்திருப்பது போன்ற பல சம்பவங்களும் ரணிலின் செல்வாக்கை உயர்த்தியிருக்கின்றது என்கின்றது அந்த செயற்கை நுண்ணறிவு மூலம் செய்யப்பட்ட கருத்துக்கணிப்பு.

அந்தக் கருத்துக்கணிப்பு அண்ணளவாக பத்து மில்லியன் சமூக ஊடக மாதிரிகளைக் கொண்டு நடத்தப்பட்டதாகவும் அதில் தேசிய மக்கள் சக்தி கீழிறங்கி, ரணில் மேலே உயர்ந்திருப்பது தெரியவந்திருக்கின்றது என்றும் ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்திருக்கின்றது. சஜித்தின் செல்வாக்கில் பெரும் சேதாரம் ஏற்படவில்லை என்றும், இனி வரும் காலங்களில் அவர் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கலாம் எனவும் தெற்கில் பரவலாக நம்பப்படுகின்றது.

- ஊர்க்குருவி.

# முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் முறைமை மாற்றம்

கொழும்பு, ஜூன் 21

பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான சுற்றறிக்கையில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சமத்துவமான கல்வியை, வெளிப்படைத்தன்மையுடன், முறைகேடுகளை குறைக்கும் வகையில், பாடசாலைகளில் முதலாம் வகுப்புக்கு மாணவர்களை சேர்க்கும் நடவடிக்கை கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த வருடங்களில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் தற்போதைய சுற்றறிக்கையை மீளாய்வு செய்து 2025 ஆம் ஆண்டு மற்றும் அடுத்த வருடங்களில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்ப்பதற்கு கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு கல்வி அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார். (ஐ)

# வட்டியில்லா கல்வி கடன் திட்டம் நடைமுறையாவதில் தாமதம் ஏன்?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

கொழும்பு, ஜூன் 21

கல்வி அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ள வேளையிலும், வட்டியில்லா கல்விக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்விலேயே இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சரின் கவனத்துக்கு அவர் கொண்டுவந்தார்.

மேலும், 2020, 2021, 2022 ஆகிய கல்வியாண்டுகளுக்கு, அரச பல்கலைக்கழகங்களுக்குத் தகுதியுற்ற மாணவர்களுக்கு உயர்கல்விக்கான வட்டியில்லா கல்வி கடன் வசதித் திட்டத்தின் கீழ் தனியார் பல்கலைக்கழகங்கள் மூலம் பட்டங்களைப் பெறுவது தொடர்பான வர்த்தமானி இதுவரை வெளியிடப்படவில்லை.

கடந்த டிசெம்பரில் வெளியாகும் என கூறப்பட்டு வந்த நிலையில், வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதால், வட்டியில்லா கடனுதவியின் கீழ் பட்டப் படிப்பை எதிர்பார்க்கும் பிள்ளைகள் அந்தப் பட்டப் படிப்புகளுக்கு பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே அனைத்து பாடக் கட்டணங்களையும் செலுத்தக்கூடிய மாணவர்கள் கட்டணம் செலுத்தி பதிவு செய்துள்ள நிலையில், அரசின் இந்த தாமதத்தால் அவர்களின் பட்டப் படிப்பு கனவு கலைந்துபோயுள்ளது.

குறித்த மாணவர்கள் மன அழுத்தத்தில் உள்ளதால், ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கவுள்ள தனியார் பல்கலைக்கழகப் பட்டப் படிப்புகளுக்கான நுழைவு அல்லது பதிவுக்கான வட்டியில்லா கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கல்வி அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கின்றேன்.

மேலும், இது தொடர்பாக கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தும் இந்த அரச கொள்கை முன்னெடுக்கப்படாமல் இருப்பது பிரச்னைக்குரிய விடயமாகும். ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கொள்கை இதுவாக இருந்தால், இதனை நடைமுறைப் படுத்த அதிகாரிகள் செயல்படவில்லை என்றால் அது அதிகாரிகளின் தவறாகும். ஒரு நாடாக எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது - என்றும் கூறினார். (ஐ)

# நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

கல்வியியல் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவிந்திரன் எழுதிய "ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம்" நூல், ஜீவநதி சஞ்சிகையின் ந. இரவீந்திரன் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் சுழிபுரத்தில் அமைந்துள்ள கே. ஏ. எஸ். சத்தியமனை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நிகழ்ச்சி தொகுப்பை புதுக்குடியிருப்பு பிரதேச கலாசார உத்தியோகத்தர் சபா. தனுஜன் "ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம்" நூலுக்கான கருத்துரைகளை முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சபா. குகதாஸ், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம், ஜீவநதி சஞ்சிகையின் ந. இரவீந்திரன் சிறப்பிதழ் தொடர்பான கருத்துரைகளை வலி. மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜெயந்தன், பிரபல பட்டிமன்ற நடுவரும், அளவெட்டி அருணோதய கல்லூரி ஆசிரியருமான த. சிறீபிரகாஸ், நூலக செயல் [illegible] யோர் ஆற்றவுள்ளனர். (ஐ)

# யாழிலிருந்து சென்ற லொறி விபத்தில் இருவர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 21

யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறிகளை தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டு சென்ற லொறி வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பௌசர் ஒன்றுடன் மோதி கவிழ்ந்ததில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிய வருகின்றது.

கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் மிஹிந்தலை - பலுகஸ்வெவ பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் லொறியில் சென்ற சாரதியும் உதவியாளருமே படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இருவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்று முதல்கட்ட தகவல்கள் தெரிவித்தன.

லொறி சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மிகிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பேராதனை பல்கலை. ஊழியர் சத்தியாக்கிரக போராட்டத்தில்!

கொழும்பு, ஜூன் 21

பேராதனை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஊதிய உயர்வு உட்பட சில பிரச்னைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை தொடர்ந்தனர். 50 நாட்களாகியும் இந்தப் போராட்டத்துக்கு தீர்வு காணப்படவில்லை. இந்த நிலையிலேயே அவர்கள் சத்தியாக்கிரக போராட்டத்தை மேற்கொண்டனர்.

கொழும்பில் இருந்து கண்டி செல்லும் பிரதான வீதியை அடுத்துள்ள கலஹா சந்தியில் இந்த சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்து வைத்த பேராதனை பல்கலைக்கழக தொழிற்சங்க பேரவையின் தலைவர் பிரியந்த வீரசூரிய, தமது பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை சத்தியாகிரகத்தில் ஈடுபடுவோம் என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu

21.06.2024 வெள்ளிக்கிழமை

குரோதி வருடம், வைகாசி 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**

- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## ஜெய்சங்கரின் சந்திப்பு

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கும் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றிருந்தது. அரை மணித்தியால சந்திப் பின்போது, தமிழ் கட்சிகளின் உறுப்பினர்கள் கூறியமையை ஜெய்சங்கர் செவிமடுத்தார்.

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் வழமைபோலவே தங்களின் ஒற்றுமையின்மையை ஒரே குரலில் பேச முடியாத கையறு நிலையை மீண்டும் ஒருமுறை இந்தியாவின் முன்னால் நிரூபிப்பதில் - தங்களின் ஆளுமையை நிரூபிக்கத் தவறவில்லை. முன்னைய சந்திப்புகளின்போது சில விட யங்களை கூறிச் செல்லும் வெளியுறவு அமைச்சர், இம்முறை எதனையும் கூறவில்லை. இவர்களை செவிமடுக்கும் பணி யையே செய்திருந்தார்.

இந்த சந்திப்பின் நோக்கம் ஒன்றுதான் - அதாவது, இந்தப் பயணமானது இந்திய அயலுறவு கொள்கையின் அடிப்படையில் நடைபெற்ற ஒன்றாகும் - அதாவது மூன்றாவது தடவையாக பதவியேற்றிருக்கும் பாரதிய ஜனதா கட்சியில் மீண்டும் வெளியுறவு அமைச்சராக பதவியேற்றிருக்கும் ஜெய்சங்கர் அவர்கள் உடனடி அயல்நாட்டுக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டியதன் சம்பிரதாயமாகவே இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றார்.

அத்துடன் ஓகஸ்ட் மாதமளவில், பிரதமர் மோடி இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில், அது தொடர்பான விடயங்களை கவனிப்பதும் அவரின் பயணத்தின் நோக்கமாக இருந்தி ருக்கின்றது. இதன்போது, தமிழ் கட்சிகளை சந்திக்காமல் சென்றால், அது சரியல்ல என்னும் அடிப்படையில்தான் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் தங்களின் மாறுபட்ட அபிப்பிராயங்களை முன்வைத்து மூக்குடைபடும் வேலையையும் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் செய்திருக்கின்றனர்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஜெயசங்கர் ஒரு வார்த்தையும் குறிப்பிடவில்லை. இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகின்றது. இந்தியா விடயங்களை மிகவும் கவனமாக அவதானித்து வரு கின்றது. இதேவேளை, தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் தெளிவான பார்வையையும் கொண்டிருக்கின்றது.

இதன் காரணமாகவே தமிழ் கட்சிகளிடம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எந்தவொரு விடயத்தையும் அவர் குறிப்பிட வில்லை. அத்தோடு, பிரதான வேட்பாளர்கள் அனைவரும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பேசிவருவதாக சந்திப்பில் பங்குகொண்டிருந்த தமிழ் கட்சிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. பிரதான வேட்பாளர்கள் அனை வருமே, அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல் படுத்துவது தொடர்பில் பேசுகின்ற போது இந்த விடயத்தில் இந்தியாவின் தலையீட்டுக்கு அவசியமில்லைதானே!

இந்தியாவிடம் எதிர்பார்ப்பதற்கு முன்னர், தமிழ் கட்சிகள் என்போர் தங்களை அரசியல் ரீதியில் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டுமென்று ஈழநாடு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக் கின்றது. இந்த விடயத்தில் இதுவரையில் தமிழ் கட்சிகள் முன்னேறவில்லை. இனியும் முன்னேறுவது சந்தேகம்தான்.

# பாலின சமத்துவம் தொடர்பான சட்டமூலத்தை அனுமதிக்கமுடியாது!

கொழும்பு, ஜூன் 21

பாலின சமத்துவம் தொடர்பான சட்டமூலத்தை அனுமதிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றில் உரை யாற்றிய போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது-

இணைவழி பாதுகாப்பு சட் டமூலமும் நீதிமன்ற வியாக்கியானத்தை மீறியே நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது தடவையாக நேற்றும் மீறப்பட்டுள்ளது. நீதிமன்ற வியாக்கியானங் களை பின்பற்ற தேவை இல்லை என ஜனாதிபதி சபையில் குறிப்பிட்டார்.

தற்போது ஜனாதிபதி யின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்ப தற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுகின்றார். 19ஆவது திருத்தச்சட்டத்தி லுள்ள சரத்தின்படி முயற் சிக்கின்றார்.

ஜனாதிபதி உயர் நீதிமன் றத்தின் தீர்மானங்களுடன் ஒத்துபோகாமல் தனியாக இயங்க முற்படுகின்றார். இதற்கு பாராளுமன்றத்தில் 3 இல் இரண்டு பெரும் பான்மை தேவை என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு இலஞ்சம் வழங்கி தனது பதவி காலத்தை அதிகரிக்க முற்படுகின்றார்.

அத்துடன் கனிபல் லிசம் என்ற சொல்லை ஜனாதிபதி பயன்படுத்தியிருக்கக் கூடாது. அரசியலமைப்பின் தீர்மானங்களுக்கு உட்பட் டால் மாத்திரமே சட்ட மூலங்களை சட்டமாக்க முடியும் - என்றார்.

(அ)

# அறுவடை பருவ சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாண விவ சாய அமைச்சால் ‘அறு வடை - 02’ பருவ இதழ் வெளியீடு நேற்று வியாழக் கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய பயிற்சி நிலைய மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது.



வடக்கு மாகாண விவ சாய அமைச்சின் செய லாளர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாயப் பணிப் பாளர் திருமதி சு. செந்தில் குமரன், நீர்ப்பாசன பணிப் பாளர் எந்திரி ந. சுதாகரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுவைக்க, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ் சன் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இதழ் மதிப்பீட்டுரையை வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பிரதித் திட்ட மிடல் பணிப்பாளர் க. ஜெயக்குமார் வழங்கி னார்.

விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு பயன்தரும் வகையில் வெளியாகியுள்ள இந்த இதழ் மின்னிதழாக வும் வெளியாகியுள்ளது.

(ஐ-02)

# செல்லப்பா சுவாமி குருபூசை தினம்!

யாழ்ப்பாணம், ஜூன் 21

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற் படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணா னந்த குருக்களால் வாராந்த திருவாசக சிறப் புச் சொற்பொழிவும் மாதாந்த ஈழத்து சித்தர்கள் குருபூசையும் நடத்தப்படுகின்றது.

இதன் இரண்டாவது தொடர் நிகழ்வில் செல்லப்பா சுவாமிகள் குருபூசை பன்னாலை சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத் தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தன பாலன் கலந்து கொள்வார். செல்லப்பா சுவாமிகள் குருபூசையை தொடர்த்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் “தேரடிச் சித்தர் மகிமை“ என்னும் விடயப்பொருளில் இளம்சைவப்புலவர் க. கயிலைவாசன் சொற்பொழிவும் நடைபெறும்.

தொடர்ந்து ஆன்மீக விருந்தினர் உரை யும் குருபூசையை முன்னிட்டு மாணவர்களி டம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 21 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 07
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பவுர்ணமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மன நிறைவு பெறும் நாள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்களை சந்திப்பீர்கள். எதிர்மறை எண்ணங்கள் விலகும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகன வசதி பெருகும். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்குழப்பம் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விஷயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும்நாள்.

**தனுசு**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். உறவினர்கள் நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டும்.

**மகரம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். பாராட்டப்படுவீர்கள். புகழ், கௌரவம் கூடும்.

**கும்பம்**
குடும்ப கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பாத்திரங்கள் ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**மீனம்**
இதுவரை கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

# கள்ளக்குறிச்சியில் 36 பேர் மரணம் தமிழக சட்டப்பேரவையில் இரங்கல்

## அ. தி. மு. க. கவனவீர்ப்பு தீர்மானம்

சென்னை, ஜூன் 21

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நேற்றுத் தொடங்கிய நிலையில் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் மற்றும் மாஞ்சோலை விவகாரங்கள் பற்றி விவாதிக்க அ. தி. மு. க., கம்யூனிஸ்ட் கட்சிகள் கவனவீர்ப்புத் தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தின.

தமிழகத்தில் துறை ரீதியாக மானிய கோரிக்கை மீதான விவாதத்துக்காக சட்டப்பேரவை கூட்டம் நேற்றுத் தொடங்கியது. இதன்போது முன்னாள் உறுப்பினர்கள் மறைவு தொடர்பாக இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டன. தொடர்ந்து குவைத் தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும், கள்ளக்குறிச்சியில்



கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சபாநாயகர் அப்பாவு, கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் விற்பது போன்ற குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவித்தார். (எ)

# கள்ளச்சாராயம் அருந்திய 36 பேர் இதுவரை மரணம்!

## சி. பி. சி. ஐ. டி. விசாரணை ஆரம்பம்

கள்ளக்குறிச்சி, ஜூன் 21

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்றுக் காலை 10 மணி வரை உயிரிழப்பு எண்ணிக்கை 36 ஆக அதிகரித்தது. விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடந்த அவசர ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின்னர் கள்ளச் சாராயம் சம்பவம் தொடர்பாக சி. பி. சி. ஐ. டி. விசாரணை ஆரம்பமானது.

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு உட்பட்ட கோட்டைமேடு அடுத்த கருணாபுரத்தில் கள்ளச் சாராயம் அருந்தியதாக 109 பேர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் புதுச்சேரி ஜிப்மர், விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சேலம் அரசு மருத்துவமனை எனபனவற்றில் சேர்க்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் இதுவரை 36 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்

இதனிடையே உயிரிழப்பு எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து நேற்றுக் காலை 10 மணி நிலவரப்படி 36 ஆக உயர்ந்தது. இதில் 3 பெண்களும் அடங்குவர். இறந்தவர்களில் இதுவரை 25 சடலங்கள் அவரவர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (எ)

# “கள்ளச்சாராய சாவுகளுக்கு பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் பதவி விலகவேண்டும்”

விழுப்புரம், ஜூன் 21

கள்ளச்சாராய சாவுகளுக்கு பொறுப்பேற்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் பதவி விலக வேண்டும் என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

திண்டிவனம் அருகே தைலாபுரம் தோட்டத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தொடர்ந்து 45 ஆண்டுகளாக மதுவுக்கு எதிராக போராடி வருகிறேன். 2016ஆம் ஆண்டு கூட்டணி இல்லாமல் தனியாக நின்றபோது எம்மை ஆட்சியில் அமர்த்தியிருந்தால் ஒரு சொட்டு சாராயம் இல்லாத தமிழகத்தை உருவாக்கியிருப்போம். கள்ளக்குறிச்சியில் 36 பேர் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தனர். இதற்குப் பொறுப்பேற்று முதல்வர் ஸ்டாலின் உடன் பதவி விலகவேண்டும். அத்தோடு,

மதுவிலக்குத்துறை அமைச்சர் முத்துசாமி, பொறுப்பு அமைச்சர் எ. வ. வேலு ஆகியோர் இச்சாவுகளுக்கு பொறுப்பேற்று பதவி விலகவேண்டும். கள்ளச் சாராயம், கஞ்சா விற்பனையில் தமிழ்நாடு தள்ளாடுகிறது. மது வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்விக்கு குடி பழக்கம் உள்ளவர்கள்கூட வேண்டாம் என்றே கூறுவார்கள்- என்றார் ராமதாஸ். (எ)

# கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் அரசின் அலட்சியத்தையே காட்டுகிறது

## நடிகர் விஜய் கண்டனம்

சென்னை, ஜூன் 21

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 36 பேர் உயிரிழந்த சம்பவம் அரசு நிர்வாகத்தின் அலட்சியத்தையே காட்டுகிறது. இது போன்ற சம்பவங்கள் நிகழாத வண்ணம், இனிமேலாவது தமிழக அரசு கடுமையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு தடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என்று நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் தெரிவித்தார்.

இது தொடர்பில் விஜய் தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில், கள்ளச்சாராயம் அருந்திய 35 இற்கும் மேற்பட்டோர் காலமான உயிரிழந்த செய்தி, மிகுந்த அதிர்ச்சியையும் மன வேதனையையும் அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் முழு உடல் நலம் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை பக்திபூர்வமாக நடைபெற்றபோது...!
(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் குருந்தூர்மலைக்கு பாதயாத்திரை

## மிகிந்தலையிலிருந்து பிக்குகள் நடத்தினர்

முல்லைத்தீவு, ஜூன்

**குருந்தூர்மலை விகாரைக்கு பொலிஸார், விஷேட அதிரடிப் படையினரின் பலத்த பாதுகாப்புடன் பிக்குகள் குழு ஒன்று பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளது.**



கடந்த 16ஆம் திகதி மகியங்கனையில் ஆரம்பமான இந்தப் பாத யாத்திரையை நேற்று குருந்தூர்மலையை அடைந்தது. இந்தப் பாத யாத்திரை நகர்ந்த வழி எங்கும் பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டு, பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன், ஆங்காங்கு வீதித் தடைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, மணலாறு (வெலிஓயா) பகுதியிலிருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் அழைத்து வரப்பட்ட பெருமளவிலான சிங்கள பௌத்த மக்கள் குருந்தூர்மலையில் பௌத்தகொடிகளை நடுதல், மற்றும் கூடாரங்களை அமைக்கும் பணிகளில் நேற்று காலை முதல் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தியாகிகள் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு!

வவுனியா, ஜூன் 21

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் (ஈ. பி. ஆர். எல். எவ்) செயலாளர் பத்மநாபா மற்றும் போராளிகளின் 34ஆவது தியாகிகள் தினம் வவுனியாவில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மணிக்கூட்டு கோபுர சந்தியில் அமைந்துள்ள பத்மநாபாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து தேக்கவைத்தையில் அமைந்துள்ள கட்சியின் பணிமனையில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இ. இந்திரராஜா, ம. தியாகராஜா, கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது!



வவுனியா, ஜூன் 21

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் விற்பனைக்காக சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரக்குற்றிகள் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டன. அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் 30 வயது நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீட்கப்பட்ட மரக்குற்றிகள் சுமார் 20 இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பெறுமதியானவை என பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, சந்தேக நபர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளார்.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகரவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலின் அஜந்த பெரேரா அவர்களின் உத்தரவின் பேரில், மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் அழகியவண்ண குழுவினர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். (ஐ)

# அதீத பதப்படுத்திய உணவால் உடல்நலனுக்கு பெருங்கேடு!

கிளிநொச்சி, ஜூன் 21

அதீத பதப்படுத்தப்பட்ட, பொதிசெய்யப்பட்ட உணவுகளை அடிக்கடி நுகரும் பழக்கத்துக்கு அடிமையாவதால் உடல் நலனுக்குப் பெருங்கேடு விளையும். எனவே வீட்டில் பாதுகாப்பாக சமைத்த - உள்ளூர் உணவுகளை உட்கொள்ளும் பழக்கத்தை வளர்க்க வேண்டும் என பூநகரி மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

தேசிய போசாக்கு விழிப்புணர்வு மாத கண்காட்சியில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் பெரும்பாலும் பொதிசெய்யப்பட்டோ, மிகை குளிரூட்டலுக்கு உட்பட்டோ அல்லது நீண்ட உணவு தயாரிப்பு வேலைகளுக்கு உட்பட்டோ இருப்பதோடு அவை அதிக நிரம்பிய கொழுப்பு, அதிக உப்பு, அதிக சீனி மற்றும் மிக அதிகளவான செயற்கை இரசாயன உள்ளீடுகளையும் கொண்டிருக்கும். இவை விளம்பரங்களூடாகவும் சுவையூட்டிகள் ஊடகவும் மக்களால் அதிகளவில் நுகரத் தூண்டப்படுகின்றன. இவை மிகவும் ஆபத்தானவை - தவிர்க்கப்பட வேண்டியவை.

மக்கள் தாங்கள் வாழும் சூழலிலுள்ள மரக்கறிகள், பழங்கள், தானியங்கள் மற்றும் விலங்குணவுகளை வீட்டு சமையலினூடு நுகர்வதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். இவையே அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த மிகவும் உதவுபவை.

ஆரோக்கியமான உணவு எமது உரிமை எனும் தொனிப் பொருளுக்கமைய அதிக சீனி, அதிக உப்பு, அதிக கொழுப்புப் பாவனையைத் தவிர்க்கவேண்டும். பொதிசெய்யப்பட்ட உணவுகளில் காட்டப்படும் நிறக்குறியீடுகளைக் கருத்திற்கொண்டு சிவப்பு குறியீடு அடங்கியவற்றை இயன்றளவு தவிர்க்கவும், மஞ்சள் குறியீடு அடங்கியவற்றை குறைவாகப் பாவிக்கவும், பச்சைக் குறியீடு அடங்கியவற்றை தேவையானபோது பாவிக்கவும் தேவையான விழிப்புணர்வை பெற்றிருக்கவேண்டும்.

தவறாக வழிநடத்தும் விளம்பரங்களுக்கு எதிராக பெற்றோரும், சமூகமும் தமது குரலை அவற்றுக்கெதிராக ஒன்று சேர்ந்து உயர்த்த முன்வருவதோடு ஆரோக்கியமான உணவுத்தேர்வில் கூடிய கவனம் செலுத்தவும்வேண்டும்.

ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதாலும், உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறையை கைக்கொள்வதாலும், அதிக உடற்பருமனைக் கொண்டிருப்பதாலும் இதயநோய்கள், நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், புற்றுநோய், பாரிசவாதம் போன்ற தொற்றாத நோய்கள் ஏற்பட்டு தரமற்ற வாழ்க்கையும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

எனவே பாடசாலை மாணவர்களை இலக்காகக்கொண்டு சுகாதார கழகங்களூடான அவர்களின் பங்களிப்புடனும் தாய்மார்கழகங்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்படும் இவ்வாறான போசாக்குக் கண்காட்சிகளும் விழிப்புணர்வுகளும் நிச்சயம் சமூகத்தில் நல்ல மாற்றங்களைத்தூண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றபோது...!

# 13 குறித்த சிறீதரனின் உரைக்கு எதிராக சிங்கள ராவய வழக்கு!

கொழும்பு, ஜூன் 21

**காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் 13ஆம் திருத்தச் சட்டத்தை பகிர்ந்தளிக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் சிறீதரன் ஆற்றிய உரை நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்.**

- இவ்வாறு குறிப்பிட்டு சிறீதரன் எம். பிக்கு எதிராக சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் பொலிஸ் திணைக்கள தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் அக்மீமன தயாரத்ன தேரர் கருத்து வெளியிடுகையில்,

நாட்டுக்கு பாதுகாப்பை இல்லாது செய்யும் ஒரு செயல்பாட்டை பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் மேற்கொண்டு வருகிறார். அண்மையில் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர் என்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும் பாராளுமன்றில் கருத்துகளை பதிவு செய்திருந்தார்.

இது இலங்கை சட்டத்துக்கு முரணானது. இவ்வாறான பிரச்னைகள் தொடர்பில் முதலில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதைத் தவிர்த்து பாராளுமன்றில் சென்று நேரடியாக கருத்துகளை முன்வைக்கின்றார். சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுகின்றார்.

மேலும், வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற கோருகிறார். இவை அனைத்துமே நாட்டுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இவ்வாறான விடயங்களை எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கவில்லை. இதன் காரணமாகவே இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளேன் - என்றார். (ஐ)

# ஒன்லைன் கடவுச்சீட்டு வழங்குவதில் தாமதம்!

## ஏற்றார் பொது பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜூன் 21

ஒன்லைன் முறையின் மூலம் கடவுச்சீட்டுகளை வழங்குவதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

விண்ணப்பதாரிகள் சரியான தரவுகளை சமர்ப்பிக்காதமையால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது. ஒன்லைனில் கடவுச்சீட்டு பெறும் போது, விண்ணப்பத்தை பூர்த்தி செய்பவர்கள் சரியான தகவல்களை உள்ளிடாததால் பிரச்னைகள் எழுந்துள்ளன.

சிலர் பயன்பாட்டில் இல்லாத தொலைபேசி இலக்கங்களை உள்ளீடு செய்துள்ளனர். இதன் காரணமாக அவர்களை தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கடவுச்சீட்டு வழங்குவதில் தாமதம் ஏற்படலாம் - என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

# 24 மணி நேரத்தில் மட்டும் 161 டெங்கு நோயாளர் பதிவு!

கொழும்பு, ஜூன் 21

நாட்டில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 161 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த 20 நாட்களில் 2 ஆயிரத்து 44 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதேவேளை, மே மாதத்தில் 2 ஆயிரத்து 647 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர்.

2024 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 26 ஆயிரத்து 964 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இவர்களில், அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தில் டெங்கு நோயால் 9 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இராணுவ பதவிநிலை பிரதானியாக ரோஹித

கொழும்பு, ஜூன் 21

இராணுவ பதவி நிலை பிரதானியாக மேஜர் ஜெனரல் ரோஹித அலுவிஹார நியமிக்கப்பட்டுள்ளார்.

விஜயபாகு காலாட்படையை சேர்ந்த மேஜர் ஜெனரல் எஸ். ஆர். பி. அலுவிஹார, பல்லேகலை 11ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் படைகளின் பிரதானியின் பணிமனையில் தலைமை தளபதியாக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய முறைமை அரசியல் தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவு

## தமிழர் விடுதலைக் கூட்டணி

கொழும்பு, ஜூன் 21

இந்திய முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்ம் எனவும், அதற்காக எந்த தரப்புடனும் இணைந்து செயல்பட தான் தயாராக உள்ளார் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

வடக்குக்கு வந்து 13ஆம் திருத்தம் தீர்வு எனக்கூறும் போது, தெற்கில் இலங்கை எரியும் என்கிறார்கள். 13ஆம் திருத்தம், சமஷ்டி எனக் கூறுவதால் தெற்கில் எதிர்ப்புகள் அதிகரிக்கும் என்பதை அறியாத அரசியல் தலைவர்களாக உள்ளனர்.

இன்று பாராளுமன்றத்தில் உள்ளவர்களில் சிலர் தூக்கில் தொங்க வேண்டியவர்களும் சிறைச்சாலையில் இருக்க வேண்டியவர்களுமாக உள்ளனர். முள்ளிவாய்க்காலில் அப்பாவி உயிர்களை காப்பாற்ற வேண்டியவர்கள் இன்று நினைவேந்தல் செய்கின்றனர்.

கடந்த 4 தடவைகளில் பாராளுமன்றத்தில் இருந்தவர்கள் சட்டவிரோதமானவர்கள் - நான் எல்லோரையும் கூறவில்லை.

பாராளுமன்றம் இறைமையை இழந்து பல ஆண்டுகளாகிவிட்டன. அங்கு இருப்பவர்களில் சிலர் சிறையில் இருக்க வேண்டியவர்கள். அரசியலில் அனுபவம் இல்லாதவர்களால் பல சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போயுள்ளன. தமிழ், சிங்கள அரசியல்வாதிகளில் நான் மூத்த அனுபவம் உள்ள அரசியல்வாதி.

இன்று பேசப்படும் அரசியல் தீர்வுகள் தீர்வாகாது. இந்திய முறைமையிலான அரசியல் தீர்வே பொருத்தமானது. அந்தத் தீர்வுத் திட்டம் என்னால் எடுத்து செல்லப்பட்ட போது ஜனாதிபதி, அமைச்சர்கள், பௌத்த மதத் தலைவர்கள், சிங்கள தலைவர்கள், சிங்கள மக்களும் மற்றும் சர்வேதேசமும் ஏற்றுக் கொண்டது.

என்னைப் பொறுத்த வரையில், அந்த தீர்வுத் திட்டத்தை யாரும் எதிர்க்க மாட்டார்கள். பொருத்தமான தீர்வும் அதுவாக இருக்கும். இந்தத் தீர்வுத் திட்டத்தை வெளிப்படையாக அறிவித்து போட்டியிடும் வேட்பாளரை ஒன்றாக சேர்ந்து ஆதரிப்போம். அதற்காக எந்த தரப்பாக இருந்தாலும் இணைந்து செயல்பட தயாராக இருக்கிறேன் - என்றார். (ஐ)

# இன்றைய தினம் நாடு முழுவதும் 20 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு

## பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

பொசன் போயா தினமான இன்று நாடளாவிய ரீதியில் 20 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபராக நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.





பொலிஸ் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், பொசன் போயா தினத்தை முன்னிட்டு யாத்திரை செல்லும் பக்தர்கள் அனைவரும் ஆபத்தான பகுதிகளில் நீராடுவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டார்.

குழந்தைகள் மற்றும் முதியவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் பொசன் போயா தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்துக்கும் தான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 1,700 சகல கட்சிகளும் இணைய வேண்டும்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு

**கொழும்பு, ஜூன் 21**
**தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பளத்தை பெற்றுக் கொடுக்க ஆளும், எதிர்க்கட்சிகளை சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1700 ரூபாய் சம்பளத்தை வழங்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளபோதும் தோட்டக் கம்பனிகள் இது வரை அதனை வழங்க மறுத்து வருகின்றன. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல் அனைவரும் இணைந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

1700 ரூபாய் சம்பளம் என்பது எந்த வகையிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு போதுமானது என நான் கூறவில்லை. என்றாலும் அதையாவது பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தற்போது வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் சம்பளம் 2020 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. அது சுமார் ஏழு டொலர்கள் ஆகும். அந்த சம்பளமே இன்றும் வழங்கப்படுவது என்பது எத்தளவு அநீதியாகும்.

இதேவேளை, அண்மையில் தோட்டம் ஒன்றில் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியில் தொழிலாளர்களின் சார்பாக நான் சம்பந்தப்பட்டுள்ள நிலையில், சில ஊடகங்கள் அந்த செய்தியை திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளன. அந்தத் தவறு நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இதேவேளை, தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழிலாளர்களை கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு கிடையாது. அந்த வகையில் தோட்ட முகாமைத்துவம் பெரும் அநீதி இழைத்து வருகின்றது - என்றார். (ஐ)

# இ. போ. ச. - கார் விபத்து நான்கு பேர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 21
இ. போ. ச. பேருந்தும் காரும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

கம்பஹா - மிரிஸ்வத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பிலியந்தலையிலிருந்து தியகட நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது இ.போ.ச பஸ் சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)



# நடிகை நடாஷா விடுதலை

கொழும்பு, ஜூன் 21
சிங்கள மொழி பத்திரிகையான ராவய உள்ளிட்ட பல குழுக்களால் தொடரப்பட்ட வழக்கை தொடர்வதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து, நகைச்சுவை நடிகை மற்றும் மேடை பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், நகைச்சுவை நிகழ்ச்சியான "மோடிபிமானயா" (முட்டாள்களின் பெருமை) என்ற நிகழ்ச்சியின் மூலம் "பௌத்த மதத்தை இழிவுபடுத்தினார்" என்று குற்றம் சாட்டப்பட்டார் நடாஷா.

தொடர்ந்து இலங்கையின் நகைச்சுவை பேச்சாளர் ஜெயனி நடாஷா எதிரிசூரிய, மே 28 அன்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பௌத்த இலக்கியங்களில் புத்தரின் பிறப்பு மற்றும் சிறுவர் பருவ வாழ்க்கை, பின்னர் சித்தார்த்தர் என அழைக்கப்பட்டது பற்றியும் மற்றும் நாட்டின் பௌத்த பெண்கள் பாடசாலைகளில் பின்பற்றப்படும் நெறிமுறைகள் குறித்தும் கிண்டல் செய்து பேசியதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பான காணொளிகளும் சமூக ஊடகங்களில் வைரலாக பகிரப்பட்டது.

தொடர்ந்து, இனவாத ஆத்திரமூட்டலை எதிர்கொண்ட நடாஷா எதிரிசூரிய, தனது கருத்துக்கு பகிரங்கமாக மன்னிப்பு கேட்கும் வீடியோவை இணையத்தில் வெளியிட்டார்.

அவரது கருத்துகள் அடங்கிய வீடியோவும் சமூக ஊடகதளத்திலிருந்து நீக்கப்பட்டது.

தற்போது, இவர் மீதான அனைத்து குற்றங்களையும் நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து, அவர் விடுதலை செய்யப்பட்டார். (அ)

# எலிக்காய்ச்சலால் பெண்கள் பாதிக்கப்படுவது அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 21
நாட்டில் லெப்டோஸ்பிரோசிஸ் எனப்படும் எலிக்காய்ச்சலால் அதிகளவு பெண்கள் பாதிக்கப்படுவதாக சுகாதார அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர்.

இது தொடர்பில், தொற்றுநோயியல் பிரிவின் மருத்துவ நிபுணர் துஷானி தபரேரா தெரிவித்துள்ளதாவது,

விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் இரத்தினக்கல் அகழ்வு போன்ற தொழில்களில் ஈடுபடும் ஆண்களை எலிக்காய்ச்சல் பீடிக்கின்றது. ஆனால், பல ஆண்டுகளாக பெண்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவதை நாங்கள் அவதானித்துள்ளோம்.

இந்தக் காய்ச்சலால் கடந்த ஆண்டு 9,000 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆண்டு இது வரை 5 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

எலிக்காய்ச்சல் என்பது ஒரு வகை பற்றீரியாவின் மூலம் பரவுகிறது. எலிக்காய்ச்சலை பரப்பும் பற்றீரியாவானது, பாதிக்கப்பட்ட எலியின் சிறுநீரகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும். எலியின் சிறுநீர், மலத்தில் இந்த பற்றீரியா வெளியேறும். எலியின் கழிவுகள் கலந்த தண்ணீர் அல்லது உணவை நாம் உட்கொள்ளும்போது எலிக்காய்ச்சல் ஏற்படும்.

எலியின் கழிவுகளை நாம் மிதித்துவிட்டால், நம் உடலில் உள்ள காயங்கள், சிராய்ப்புகள், உலர்ந்த பகுதிகள், வாய், மூக்கு, அந்தரங்கப் பகுதிகள் வழியாக பற்றீரியாக்கள் உடலுக்குள் சென்றுவிடும்.

கடுமையான மழையை தொடர்ந்து தொற்றுநோய்களின் அபாயம் அதிகரிக்கிறது, இது நீர் ஆதாரங்கள் மாசுபடுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. இந்த காய்ச்சல், தசை வலி, மஞ்சள் காமாலை, இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளுடன் வெளிப்படுகிறது. கடுமையான சந்தர்ப்பங்களில், சிறுநீரகம், இதயம் அல்லது சுவாச செயலிழப்புக்கு வழிவகுக்கும். எலிக்காய்ச்சலுக்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற வேண்டும்.

பாதுகாப்பான சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும், அசுத்தமான தண்ணீருடன் தொடர்பை தவிர்த்தல், முறையான கழிவு முகாமைத்துவம் போன்றவற்றால் நோய் பரவலை தடுக்கலாம். (ஐ)

# 25 ஆண்டுகளாக வர்த்தகம் செய்யும் நெல்லியடி வணிகர்கள் கௌரவிப்பு

வடமராட்சி, ஜூன் 21
நெல்லியடி வணிகர் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ள 25 ஆண்டுகளுக்கு மேல் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நெல்லியடியில் தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

நெல்லியடி வணிகர் கழக தலைவர் சி.சிவம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மங்கள இசை முழங்க மலர் மாலை அணிவிக்கப்பட்டு விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.



இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனுக்கு "பொதுப்பணிப் பூபதி" எனும் உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணத்தின் பிரபல தொழிலதிபர் நாகரத்தினம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நரம்பியல் மருத்துவ நிபுணர் ஆதித்தன் ஆகியோரும் அவர்களின் சேவைக்காக இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான விருதுகளையும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ளஸ் வழங்கிவைத்தார்.

தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகத்திலுள்ள வீடொன்றில் சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த வீட்டை பொலிஸார் சுற்றி வளைத்தனர். அங்கிருந்து 200 லீற்றர் கோடா மற்றும் 6 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், சட்டவிரோத மதுபான உற்பத்தியை மேற்கொண்ட 31 வயது நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமுனை வீதி வளைவு விவகாரம் இடைக்கால தடையுத்தரவு நீடிப்பு!



சம்மாந்துறை, ஜூன் 21

**வீரமுனை கிராமத்துக்கான நுழைவாயில் வரவேற்பு வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இரு தரப்பின் வாதப் பிரதிவாதங்களின் பின்னர் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரமுனை கிராமத்துக்கான நுழைவாயிலில் வரவேற்பு வளைவு அமைப்பதற்கான பணிகள் வீரமுனை மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான தடையுத்தரவொன்றை கடந்த 15 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸார் நீதிமன்றில் பெற்றிருந்தனர்.

வீரமுனையில் வரவேற்பு வளைவு அமைப்பதான நிகழ்வானது இன முரண்பாட்டை, இன வன்முறையை ஏற்படுத்தும் என சம்மாந்துறை பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டு குறித்த தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது.

மேற்குறித்த வழக்கு புதன்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி டி. கருணாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, மன்றில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்ட வீரமுனை சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலய நிர்வாகம் மற்றும் சமூகச் செயல்பாட்டாளர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பே. பிரேம்நாத் முன்னிலையானார்.

இதன்போது இரு சாராரின் விண்ணப்பங்கள், சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிவான் குறித்த வழக்கை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேலும், இன முரண்பாடுகள் ஏற்படும் இனக் கலவரம் ஏற்படும் என்ற வகையில் தடையுத்தரவை பொலிஸார் கோரியிருந்த போதிலும் அவ்வாறு இனக் கலவரம் ஏற்படுத்துவார்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களை கைது செய்யாது இவ்வாறான கட்டளைகளைப் பெற்றிருப்பதானது அடிப்படையற்றது என்பதை நீதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாக ஊடகங்களிடம் சட்டத்தரணி பே. பிரேம்நாத் தெரிவித்தார்.

(எ)



# அரசாங்கம் எம்மை சாகும்வரையான உண்ணாவிரதத்துக்கு நகர்த்துகிறது

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

கல்முனை, ஜூன் 21

நியாயமான மற்று[illegible]ங்களுக்கு வழங்குவதாக அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை நிவர்த்திக்குமாறு கோரி நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த 50 நாட்களாக போராடிவரும் சூழலில் அரசும் சம்மந்தப்பட்ட நிர்வாகிகளும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது எங்களை சாகும்வரையான உண்ணாவிரத போராட்டத்துக்கு தள்ள எத்தனிப்பது போன்று உள்ளதாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம். எம். முகமது காமில் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 50 நாட்களாக தங்களது போராட்டங்களை பல்வேறு வியூகங்களை வகுத்து முன்னெடுத்து வரும் நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று முன்தினம் 19 ஆம் திகதி சுழற்சி முறையான உண்ணாவிரதப் போராட்டத்தையும் சத்தியாக்கிரக போராட்டத்தையும் பல்கலைக்கழக நுழைவாயிலில் ஆரம்பித்துள்ளனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(எ)



# சாதனை மாணவன் ஸலாமாவுக்கு புல்மோட்டையில் அமோக வரவேற்பு

புல்மோட்டை, ஜூன் 21

இலங்கை, இந்தியாவுக்கு இடையிலான பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக்கடந்த முதலாவது முஸ்லிம் மாணவன் என்கிற சிறப்புச் சாதனையை தனதாக்கிக் கொண்ட திருகோணமலை ஸாஹிராக் கல்லூரியின் மாணவன் ஹஸன் ஸலாமாவுக்கு புல்மோட்டையில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

(எ)






# கல்முனை கார்மேல் பற்றிமா மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டு விழா

கல்முனை, ஜூன் 21

அம்பாறை கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச. இ. றெஜினோல்ட் தலைமையில் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் பற்றிமா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரிபன் மத்தியூ கலந்து சிறப்பித்தார்.

கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்டு சிரேஷ்ட மாணவத் தலைவர்களாக கடமையாற்றிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

(எ)

# வலய வலைப்பந்தாட்ட சம்பியனானது அன்னமலை மகா வித்தியாலய அணி

சம்மாந்துறை, ஜூன் 21

சம்மாந்துறை வலய வலைப்பந்தாட்ட சம்பியனாக நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய அணி வெற்றி வாகை சூடியது.

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் வலைப்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை சம்மாந்துறை அல் மல்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது .

16 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் வீரமுனை இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், சம்மாந்துறை அல் மல்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகளைத் தோற்கடித்து நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய அணி சம்பியனாக வெற்றி பெற்றது.



# நாய்களுக்கான பராமரிப்பு நிலையம் வாகரையில் ஆளுநரால் திறந்துவைப்பு



வாகரை, ஜூன் 21

கைவிடப்பட்ட நாய்களுக்கும் நாய்க்குட்டிகளுக்கும் ஊட்டச்சத்தான உணவுடன் பாதுகாப்பான இருப்பிடம் வழங்கும் நோக்கில் வாகரையில் நாய்கள் பராமரிப்பு நிலையமொன்றை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

(எ - 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்ட 90 இந்தியர்கள் உட்பட 645 பேர் பலி!

ரியாத், ஜூன் 21

**கடும் வெப்பத் தாக்கத்தால் நடப்பு ஆண்டில் ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்ட இந்தியர்களில் 90 பேர் உயிரிழந்தனர். இதேவேளை, வெப்பத்தால் சுமார் 645 ஹஜ் யாத்திரிகர்கள் இதுவரை உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.**

இதேவேளை, ஹஜ் யாத்திரை மேற்கொண்ட பலரை காணவில்லை.

அங்கு வெப்பம் 50 டிகிரி செல்சியஸ் அளவுக்கு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு யாத்திரையின் போது வெப்பம் காரணமாக சுமார் 200 பேர் உயிரிழந்தனர். 2,000 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டு இப்போதே 645 பேர் உயிரிழந்தனர் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. அத்தோடு பலரை காணவில்லை என்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

முறைப்படி பதிவு செய்யாத யாத்திரிகர்கள் நீண்ட நேரம் வெயிலில் காத்திருக்க வேண்டியுள்ளது. உணவு, நீர், குளிர்பான வசதி மற்றும் உரிய தங்குமிட வசதி இல்லாதது போன்ற பல்வேறு இன்னல்களை அவர்கள் எதிர்கொள்வதாக சவுதி அரேபியா அதிகாரிகள் தெரிவித்தனர்.

(எ)

# இராணுவ வெடிபொருட்கள் கிடங்கில் திடீரென ஏற்பட்ட விபத்தில் 9 பேர் பலி

ஜமீனா, ஜூன் 21

சாட் நாட்டில் இராணுவ வெடிபொருட்கள் கிடங்கில் திடீரென ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 9 பேர் பலியாகினர். 46 பேர் படுகாயமடைந்தனர்.

சாட் நாட்டின் தலைநகர் ஜமீனாவில் கவுடுஜி மாவட்டத்தில் இராணுவ வெடிபொருட்கள் கிடங்கு உள்ளது. திடீரென இந்தக் கிடங்கில் வெடிவிபத்து ஏற்பட்டது. 38 நிமிடங்களுக்கும் கூடுதலாக வெடிபொருட்கள் வெடித்ததில், அருகேயிருந்த கட்டடங்கள் குலுங்கின.

கிடங்கில் இருந்து வெடிபொருட்கள் வெளியே தூக்கி எறியப்பட்டன. வெடிவிபத்து ஏற்பட்டதில், கரும்புகை வான் வரை பரவியது. இந்த சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 46 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். வெடிவிபத்து ஏற்பட்டதற்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை. எனினும், பாதுகாப்பு மற்றும் சுகாதார அதிகாரிகள் உதவியுடன் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.




# பாரிஸ் கண்காட்சியில் இந்தியாவின் ஆயுதங்கள்

பாரிஸ், ஜூன் 21

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் நடைபெற்ற இராணுவக் கண்காட்சியில் இந்தியாவில் தயாரான ஆயுதங்கள், தளபாடங்கள் இடம்பெற்று பார்வையாளர்களைக் கவர்ந்தன.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் யூரோசாட்டரி 2024 என்ற பெயரில் இராணுவக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இந்த கண்காட்சியானது ஐரோப்பாவிலேயே நடைபெறும் பெரியளவிலான பாதுகாப்புக் கருவிகள் கண்காட்சியாகும்.

(எ)

# கனடா பாராளுமன்றத்தில் ஹர்தீப் சிங்கிற்கு அஞ்சலி

## இந்தியா பதில் நடவடிக்கை

புதுடில்லி, ஜூன் 21

கனடாவில் கொல்லப்பட்ட காலிஸ்தான் அமைப்பைச் சேர்ந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார்க்கு அந்த நாட்டு பாராளுமன்றத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனை இந்தியா கண்டித்துள்ளது.

கடந்த ஆண்டு கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள குருத்வாரா அருகே மர்ம நபர்களால் காலிஸ்தான் அமைப்பைச் சேர்ந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக இந்தியா மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டினார். ஆனால், இந்த குற்றச்சாட்டு உள்நோக்கம் கொண்டது என்றும் அபத்தம் என்றும் இந்தியா மறுத்துவிட்டது. இதனால், இந்தியா - கனடா நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.



இந்த நிலையில் கனடா பாராளுமன்றத்தில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார்க்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கனடா பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதற்குப் பதிலடியாக, 1985 ஆம் ஆண்டு ஏர் இந்தியா கனிஷ்கா விமானத்தில் காலிஸ்தான் அமைப்பினர் வைத்த வெடிகுண்டு வெடித்ததில் உயிரிழந்த 329 அப்பாவிகள் நினைவாக மௌன அஞ்சலி கூட்டம் நடத்தப்போவதாக கனடாவுக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

ஸ்டான்லி பூங்காவிலுள்ள செபர்லே விளையாட்டு திடலில் ஏர் இந்தியா நினைவிடத்தில் 23 ஆம் திகதி மாலை 6: 30 மணிக்கு மௌன அஞ்சலி கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்திய வம்சாவளியினர் இந்த நிகழ்ச்சியில் கூட்டாக இணைந்து கலந்து கொள்வதன் மூலம் தீவிரவாதத்துக்கு எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்று இந்தியத் தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது.

(எ)

# 50 பேரின் குடும்பங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் இழப்பீடு

டுபாய், ஜூன் 21

குவைத்தில் அடுக்குமாடி குடியிருப்பு தீ விபத்தில் பலியான 50 பேரின் குடும்பங்களுக்கு தலா 15,000 அமெரிக்க டொலர்கள் (சுமார் 50 இலட்சம் ரூபாய்) இழப்பீடு வழங்கப்படும் என குவைத் அரசு அறிவித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி அதிகாலையில் இந்த அடுக்குமாடி குடியிருப்பின் தரைத்தளத்தில் மின்கசிவு ஏற்பட்டு தீ பிடித்தது.

இந்த பயங்கர விபத்தில் தீயின் கோரப்பிடியில் சிக்கி 50 பேர் பலியாகினர். அவர்களில் 46 பேர் இந்தியர்கள் ஆவர்.

முன்னதாக இந்த தீ விபத்தில் பலியான இந்தியர்களின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என இந்திய மத்திய அரசு அறிவித்தது. அதேபோன்று தீ விபத்தில் உயிரிழந்த தங்கள் மாநிலத்தை சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதாக கேரள அரசும், தமிழக அரசும் தனித்தனியே அறிவித்தன.

(எ)

# கப்பல் முழுமையாக மூழ்கியது

சனா, ஜூன் 21

ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் சிக்கிய சரக்கு கப்பல் செங்கடலில் மூழ்கியது. ஒரு வார காலமாக செங்கடலில் மூழ்கிக்கொண்டிருந்த சரக்கு கப்பல் முழுமையாக மூழ்கியது.

கடந்த 12 ஆம் திகதி செங்கடலில் பயணித்துக்கொண்டிருந்த கிரீஸ் நாட்டை சேர்ந்த சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். நிலக்கரி ஏற்றி சென்ற அந்த சரக்கு கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியும், வெடிபொருட்களை ஏற்றிவந்த படகுகளை மோதியும் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் சரக்குக் கப்பலில் தீ பற்றியது.

[illegible] அவ்வழியாக சென்ற மற்றொரு சரக்கு கப்பலை



சேர்ந்த ஊழியர்கள் தாக்குதலுக்குள்ளான சரக்கு கப்பலில் இருந்த மாலுமிகளை மீட்டனர். இதேவேளை, தாக்குதலில் சிக்கிய மாலுமி ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

இதேவேளை, நிலக்கரியை ஏற்றிவந்த கப்பல் தாக்குதலில் பெரும் பாதிப்பை சந்தித்ததையடுத்து அது நடுக்கடலில் கைவிடப்பட்டது.

இந்த நிலையில், அந்தக் கப்பல் முழுமையாக மூழ்கியது.

(எ)

# தன்பாலின திருமணம் தாய்லாந்து அனுமதி!

பாங்கொக், ஜூன் 21

தாய்லாந்தில் ஒரே பாலின திருமணங்களுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்க வகை செய்யும் திருமண சமத்துவ தீர்மானம் பாராளுமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்பு நிறைவேறியது. இதனை தொடர்ந்து செனட் சபையிலும் திருமண சமத்துவ சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டத்துக்கு 130 பேர் ஆதரவாக வாக்களித்தனர். சிலர் வாக்களிக்காமல் வெளியேறினார். 4 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

ஏற்கனவே, மக்கள் பிரதிநிதிகள் சபையில் கடந்த மார்ச் மாதம் இந்தத் தீர்மானம் நிறைவேறியது. இதன்மூலம் விரைவில் தாய்லாந்தில் தன்பாலின திருமணம் சட்டபூர்வமாக இருக்கிறது.

இதன் மூலம் ஓர் ஆண் மற்றோர் ஆணையும், ஒரு பெண் மற்றொரு பெண்ணையும் திருமணம் செய்து கொள்ள முடியும். இதன் மூலம் தன்பாலின திருமணத்தை சட்டபூர்வமாக்கும் முதல் தென்கிழக்கு ஆசிய நாடாக தாய்லாந்து [illegible]

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணிலை சந்தித்தார் ஜெய்சங்கர்!



**கொழும்பு, ஜுன் 21**

**உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.**

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரின் இலங்கை வருகையில் இந்திய - இலங்கை உறவுகளில் மூன்று மைல்கற்கள் எட்டப்பட்டன.

இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 106 வீடுகளுக்கான நினைவுப் படிகங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கலாநிதி ஜெய்சங்கர் ஆகியோர் கூட்டாக மெய்நிகர் ஊடாக திறந்துவைத்தனர்.

அத்துடன், கொழும்பு, திருகோணமலை நகரங்களிலுள்ள மாதிரி கிராமங்களிலுள்ள 24 வீடுகள் மெய்நிகர் ஊடாக பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

(ஐ)

# கோட்டாவின் வீட்டுத் தாக்குதல் பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லையாம்!

கொழும்பு, ஜுன் 21

2022ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானவிலுள்ள தனிப்பட்ட இல்லத்துக்கு அருகாமையில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலைக்கு முன்னர் எந்தவொரு புலனாய்வுத் தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் அறிவித்தார்.

இந்த பதற்றமான சூழ்நிலையில் பொலிஸாரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் நபர்கள் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட பல அடிப்படை உரிமை மனுக்கள் நீதியரசர்கள் விஜித் மலல்கொட மற்றும் யசந்த கோதாகொட முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி ஷமிந்திர விக்கிரம இதனைத் தெரிவித்தார்.

மனுதாரர்களில் முன்னணி தேசிய நாளிதழ் ஒன்றின் பத்திரிகையாளரும் மற்றொரு பத்திரிகையாளரின் மனைவியும் உள்ளடங்குகின்றனர். இந்த மனுக்களின் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் நடந்த சம்பவத்தை நீதிமன்றத்தில் விளக்கிய அரச தரப்பு சட்டத்தரணி, சமூக ஊடகங்களில் இருந்து பெறப்பட்ட சம்பவத்தின் வீடியோ ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் குறித்து நீதியரசர் கோதாகொட அரச சிரேஷ்ட சட்டத்தரணியிடம் வினவியபோது, அரச தரப்பு சட்டத்தரணி எதிர்மறையாக பதிலளித்தார்.

அன்றைய தினம் இரவு 11.50 மணியளவில் சம்பவம் நடந்த இடத்திலும் மக்கள் முன்னிலையிலும் பேருந்துக்கு தீ வைக்கப்பட்டதாகவும், காணொளிக் காட்சிகளின்படி கூடியிருந்த மக்கள் மீது தாக்குதல் எதுவும் காணப்படவில்லை என்றும் அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளர்.

நள்ளிரவுக்கு முன்னர் அனைத்து பதற்றமான சூழ்நிலைகளும் ஏற்பட்டன. மேலும் நள்ளிரவில் கூட்டத்தை கலைத்து பொலிஸ் மற்றும் அதிரடிப் படை ஆதரவுடன் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற இடத்தைச் சுற்றி இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தபோதிலும், கூட்டத்தைக் கட்டுப்படுத்த அழைக்கப்படவில்லை என அவர் கூறினார்.

எவ்வாறாயினும், நள்ளிரவுக்குப் பிறகு கூட்டம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது என்று நீதிபதி கோதாகொட கூறினார்.

பாதுகாப்பு தரப்பினரல் நடத்தப்பட்ட தாக்குதலால் தங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து மனுதாரர்கள் எந்தக் குறிப்பும் தெரிவிக்கவில்லை என்றும் அரச தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதன்படி மனுதாரர்கள் இந்த நீதிமன்றத்துக்கு வருவதற்கு முன்னரே இந்த சம்பவம் புனையப்பட்டு நீதிமன்றில் பொய் கூறி இந்த மனுக்களை தாக்கல் செய்தமையால் சம்பவம் நடந்து பல மாதங்களுக்கு பின்னர் இந்த அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்-என்றார் அவர்.

இந்த மனுக்கள் மீதான அடுத்தகட்ட விசாரணையை ஜுலை 24ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (அ)

# அழகி பியுமி ஹன்ஸமாலியின் பெயரில் உள்ள 19 வங்கிக்கணக்கு விவரத்தை கோரும் நீதிமன்று

கொழும்பு, ஜுன் 21

இலங்கையின் மொடல் அழகி பியுமி ஹன்ஸமாலி, பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை, சந்தேகத்துக்கு இடமான வகையில் சம்பாதித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடத்தப்படும் விசாரணைக்காக, நாட்டிலுள்ள 8 பிரதான வங்கிகளினால் பேணப்படும் 19 கணக்குகளின் விவரங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்குமாறு மாளிகாகந்தை நீதவான் மஞ்சுள திலகரத்ன உத்தரவிட்டுள்ளார்.

இரகசியப் பொலிஸின் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கைக்கு அமைய, மேற்படி உத்தரவுகள் வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சஞ்சய் மஹவத்த என்பவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் சம்பத் ராஜகருணா மற்றும் பிரதிப் பொலிஸ் பரிசோதகர் தரங்க லக்மால் ஆகியோர் நீதிமன்றில் உண்மைகளை முன்வைத்தனர்.

கொழும்பு ஹில்டன் குடியிருப்பில் வசிக்கும் பியுமி ஹன்ஸமாலி ரேஞ்ச் ரோவர் காரை வாங்கியதுடன், கொழும்பில் உள்ள குடியிருப்பு வளாகத்தில் 148 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீட்டை வாங்கியுள்ளார். அத்துடன் எட்டு பெரிய வங்கிகளில் பராமரிக்கப்பட்டு வந்த 19 வங்கி கணக்குகள் மூலம் கோடிக்கணக்கான பணத்தை வைப்பிலிட்டுள்ளார். குறுகிய காலத்தில் இந்த சொத்துக்களை எப்படி சம்பாதித்தார் என்பது தொடர்பாக இந்த விசாரணை நடத்தப்படுகிறது.

2011 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட பணமோசடிச் சட்டத்தின் 6 ஆம் இலக்கத்தின் கீழ் இந்த விசாரணை நடத்தப்பட்டு, இரகசியப் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த நீதவான், வங்கிக் கணக்குப் பதிவேடுகளை சமர்பிக்க வங்கிகளுக்கு உத்தரவிட்டார்.

(அ)

# உலக வங்கியின் இலங்கை பிரதிநிதியாக டேவிட் சிஸ்லென்!



கொழும்பு, ஜுன் 21

இலங்கை, மாலைதீவு, நேபாளம் நாடுகளுக்கான உலக வங்கியின் புதிய நிர்வாக இயக்குநராக டேவிட் சிஸ்லென் நியக்கமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் எதிர்வரும் ஜுலை முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.

டேவிட் சிஸ்லென் அமெரிக்கா மற்றும் இத்தாலி இரட்டை குடியுரிமை பெற்றவர். இவர் 2001 ஆம் ஆண்டில் உலக வங்கியில் தனது பணியை ஆரம்பித்தார்.

தனது புதிய பதவி தொடர்பில் டேவிட் சிஸ்லென் தெரிவிக்கையில்,

"எனது சேவையை சிறப்பாக வழங்க நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். மேலும், உலக வங்கியின் நிர்வாக தலைவர்கள் மற்றும் பல்வேறு ஊழியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளேன். உலக வங்கியின் அனைத்து திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை சிறப்பாக முன்னெடுப்பதே எனது நோக்கம்" - என்றார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த முன்னாள் எம்.பி. லயனல் பிரேமசிறி

கொழும்பு, ஜுன் 21

முன்னாள் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான லயனல் பிரேமசிறி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டார்.

காலி மஹிந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் தொழில் ரீதியாக சட்டத்தரணியாவார்.

சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியலுக்குள் பிரவேசித்த அவர் காலி மேயராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து மீண்டும் காலி மாவட்ட மேயராக தெரிவு செய்யப்பட்டார்.

லயனல் பிரேமசிறி 2004இல் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து காலி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்திற்குள் நுழைந்தார்.

அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து 2007 - 2010 காலப் பகுதியில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன் பிரதி அமைச்சராக கடமையாற்றினார்.

கனடாவின் பிரதி தூதுவராகவும் சில காலம் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாலின சமத்துவ சட்டமூலத்தால் நாட்டின் கலாசாரத்துக்கு ஆபத்து

## பௌத்த காங்கிரஸ் இப்படி எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 21

வழமைக்கு மாறாக பாலுறவு கொள்ளும் சமூகத்தினரையும் பால்புதுமையினரின் உரிமைகளையும் ஊக்குவிக்கும் சட்டமூலத்தால் நாட்டின் கலாசாரத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் எச்சரித்துள்ளது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெண்களை வலுப்படுத்தும் சட்டமூலத்தையும் பாலின சமத்துவ சட்டமூலத்தையும் [illegible] சித்துள்ள அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் இந்த சட்டமூலம் வழமைக்கு மாறாக பாலுறவு கொள்ளும் சமூகத்தினரையும் பால்புதுமையினரின் உரிமைகளையும் ஊக்குவிக்கும் உள்நாட்டு கலாசாரம் நெறிமுறைகள் விழுமியங்களை சமரசம் செய்யும் என தெரிவித்துள்ளது.

மேற்குலகில் கூட பிள்ளைகள் பால் மாற்றத்தில் ஈடுபடுவதை பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று பௌத்த காங்கிரஸின் தலைவர் சந்திரா நிமல் வகிஸ்ட தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு குடும்ப அடிப்படையிலான தாய்வழி சமூகம் என தெரிவித்துள்ள அவர் இந்த சட்டமூலங்கள் இலங்கையின் நெறிமுறைகள் மற்றும் விழுமியங்களை நிச்சயம் சமரசம் செய்யும் எனவும் தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு பாலியல்நோக்குநிலையை கொண்டவர்கள் உள்ளனர் அவர்களின் சார்பில் தனித்தனி சட்டங்களை கொண்டுவரக்கூடாது எனத் தெரிவித்துள்ள அவர் எனினும் அனைவரையும் சமமமாக நடத்தவேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

மொன்டிநீக்ரோ, வடமசடோனியா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

ஐக்கிய இராச்சியத்தின் (பிரித்தானியா) மனித உரிமைகள் தூதுவர் ரீட்டா பிரென்ஞ் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக் கப்படுதல் மிக நீண்டகாலமாக காணப்படுவதை வெளிப்படுத்திய இலங்கையின் பலவந்த மாக காணாமல் ஆக்கப்படுதல் குறித்த உங்கள் (ஆணை யாளரின்) அறிக்கைக்கு நன்றி.

பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டதால் ஏற்பட்ட துயரங்களுக்கமைக் அதனால் அனைத்து சமூகங்களுக் கும் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் தீர்வை காண்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் பணி மனையின் அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை அரசாங்கம் உருவாக்கும் - நடைமுறைப்படுத்தும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் உட்பட புதிய சட்டமூலங்கள் ஏதும் அதன் மனித உரிமை கடப்பாடுகளை நிறைவேற்றுவதாக - கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதாக காணப்படவேண்டும்.

நீதித்துறையின் சுதந்திரத்தையும் நாட்டில் சட்ட அமைப்புகளின் சுதந்திரம் வெளிப்படை தன்மையையும் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தையும் நாங்கள் வலியுறுத்துகின்றோம். யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில் காணிகள் விடுவிக்கப்பட்டதை வரவேற்கின்றோம்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகளால் பதற்ற நிலை காணப்படுவதாக வெளியான தகவல்களில் நாம் கரிசனை கொண்டுள்ளோம். ஜெனிவா தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய நாடுகள் கண்மூடித்தனமான கைதுகள், தேடுதல் நடவடிக்கைகள், பொலிஸாரின் நடவடிக்கைகளின்போது தடுத்து வைக்கப்படல் குறித்தும் கரிசனையடைந்துள்ளோம்.

இலங்கை அரசாங்கம் நிலைமாறு கால நீதி பொறிமுறைகள் சுயாதீனமான வையாக அனைவரையும் உள்வாங்குபவையாக பக்கச் சார்பற்றவையாக வெளிப்படைதன்மை மிக்கவையாக பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்பவையாக காணப்படுவதை உறுதி செய்யவேண்டும் - என்று இணை அனுசரணை நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

## நெடுந்தீவில்...

இந்தச் சம்பவத்தில் தேவராஜ் அருள்ராஜ் (வயது 23) என்பவரே கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞருக்கும் அவரை தாக்கிய இருவருக்கும் இடையே முன்விரோதம் இருந்துள்ளது. இந்த நிலையில், நேற்று நள்ளிரவு மதுபோதையில் இருந்த இவர்களிடையே தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இது மோதலில் முடிந்தது. இதில், கொலை சந்தேக நபர்கள் இளைஞரை அடித்தும் கூரிய ஆயுதங்களால் குத்தியும் கொன்றனர்.

கொலை சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை கைது செய்ய நெடுந்தீவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## தமிழ்...

நடந்த இந்த சந்திப்பில் தமிழ் பொது வேட்பாளர், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஆதரவான - எதிரான கருத்துகளை ஜெய்சங்கரின் முன்பாக சந்திப்பில் பங்கேற்றவர்கள் முன்வைத்தனர்.

இவர்களின் கருத்துகளை செவிமடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் அவர்களின் கருத்துகள் தொடர்பாக சில கேள்விகளை எழுப்பியிருந்தாரே தவிர, தமிழ் கட்சிகளின் தலைவர்களின் கோரிக்கைக்கு எந்தவிதமான கருத்துகளையும் அல்லது உறுதிமொழிகளையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜெய்சங்கர் முன்பாகவும்...

உள்ள இந்திய இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பு சுமார் அரை மணி நேரம் நீடித்தது. இந்த சந்திப்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, சி. சிறீதரன். எம். ஏ. சுமந்திரன். சாணக்கியன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், புளொட் கட்சியின் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கல நாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் செ. கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். தமிழ் அரசின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் இந்த சந்திப்பில் இயலாமை காரணமாக பங்கேற்கவில்லை.

சந்திப்பு ஆரம்பமானபோது, மீளவும் இந்திய வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற ஜெய்சங்கருக்கு வாழ்த்துகளையும் - வரவேற்பையும் தெரிவித்தனர். அத்துடன், தமிழ் மக்களின் பிரச்னை தீர்வு தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் கோரினர்.

தொடர்ந்து, தமிழ் மக்களின் பிரச்னைத் தீர்வுக்காக மாகாண சபை முறைமையை - 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினர்.

தமிழ்த் தலைவர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் எம். பி. எதிர்புத் தெரிவித்தார். தமிழ் மக்களுக்கான தீர்வு இது இல்லை என்று கூறி தமது கட்சியின் தீர்வு திட்ட வரைவு குறித்த ஆவணத்தையும் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவதை தாம் ஆதரிக்கின்றனர் என்று விக்னேஸ்வரன், சிறீதரன் ஆகியோர் குறிப்பிட்டனர்.

இவர்களின் இந்த நிலைப்பாட்டை தாம் எதிர்க்கிறார் என்று சுமந்திரன் எம். பி. உடனடியாகவே தெரிவித்தார். அவருக்கு சாணக்கியன் எம். பியும் ஆதரவு தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் எந்தளவில் உள்ளது? தமிழ் கட்சிகள் ஆர்வமாக உள்ளனவா? என்று தமிழ் கட்சிகளின் தலைவர்களை கேட்டார் ஜெய்சங்கர்.

இதற்கு பதிலளித்த விக்னேஸ்வரன் எம். பி., தமிழ் பொது வேட்பாளர் விடயம் பேச்சு மட்டத்திலேயே உள்ளது. சிவில் சமூக அமைப்புகள் பேசுகின்றன. சில கட்சிகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன. நானும் இதனை ஆதரிக்கிறேன் - என்று கூறினார். இதன்போது, சித்தார்த்தன் எம். பியும். இதே வகையான பதிலைக் கூறினார்.

இதைத் தொடர்ந்து, செல்வம் அடைக்கலநாதன் எம். பி. வடக்கு மாகாணத்தில் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பில் ஜெய்சங்கரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். திட்டமிட்ட சிங்கள - பௌத்த ஆதிக்கம் தொடர்பிலும் கருத்துரைத்தார்.

இந்த சமயத்தில் குறுக்கிட்ட சித்தார்த்தன் எம். பியும் வடக்கு - கிழக்கில் காணி ஆக்கிரமிப்பு சிங்கள - பௌத்தத்தின் "மாஸ்டர் பிளான்". போர் நடந்த காலத்திலேயே இது தொடர்பில் திட்டமிட்டு விட்டார்கள் என்று அது தொடர்பான தகவல்களையும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து சந்திப்பு நிறைவடைந்தது. (ஐ)

## பிரதான...

அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இப்போது பிரதமராக இருக்கும் தினேஸ் குணவர்தன அப்போது அமைச்சராக இருந்தபோது அவர் தலைமை வகித்த ஒரு தெரிவுக்குழு கூட தேர்தலை சிறிய திருத்தத்துடன் நடாத்தலாம் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தது. இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது. முக்கிய மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களும் மாகாணசபை தேர்தல்களை நடாத்துவதற்கு அல்லது மாகாணசபை முறைமையை தொடர்வதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்திலே இம் மூவருமாக திருத்தத்தைக் கொண்டுவந்து மாகாண சபைத் தேர்தலை நடத்தி மாகாண சபைகளை இயங்கச் செய்ய வேண்டும்.

மாகாணசபை முடிந்த முடிவு என்று நான் கூறவில்லை. அதன்மூலம் வரக்கூடிய அதிகாரப்பரவலாக்கல் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் திருப்தியானது என்று நான் கூறவில்லை. ஆனாலும் அரசியலமைப்பிலே எழுத்திலே இருக்கக்கூடிய ஒரு விடயத்தை செய்ய வேண்டும் என்றுதான் நாம் கேட்கின்றோம். இதைச் செய்வதன் மூலம் கொஞ்சமேனும் அதிகாரப்பரவலாக்கல் நிச்சயமாகக் கொடுக்கப்பட வேண்டும். அந்த விடயம் இருக்கிறது. அது முன்னேற்றப்பட வேண்டும் என்ற விடயங்கள் பேசப்பட்டுக்கொண்டு இருக்கும். ஆகவே, இருப்பதையும் இல்லாமலாக்கிவிட்டு பழையபடி முதலில் இருந்து ஆரம்பிக்க முடியாது. ஆகவே மாகாணசபை முறைமையை மீண்டும் அமுல்படுத்துவதற்கு இப்போது நல்ல சந்தர்ப்பம். மூன்று முக்கிய வேட்பாளர்களும் அதற்கு சம்மதிக்கின்றார்கள். ஆகவே அதைச் செய்ய வேண்டும். -என்றார். (அ)

## ஜனாதிபதித்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கருத்து வெளியிட்டபோது, அது தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவினேன். அவ்வாறான எவ்வித திட்டமும் இல்லை, தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

அடுத்தது ஜனாதிபதியின் பதவி காலம் நீடிப்பு பற்றியும் தகவல்கள் வெளியாகின. அது பற்றியும் வினவினேன். அவ்வாறு எவ்வித திட்டம் இல்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெற்றியோ, தோல்வியோ நிச்சயம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் பெரும்பாலான வர்கள் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை - என்றார். (அ)

## யார்...

சர்வகட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் விளைவை அடுத்த தேர்தலின் பின்னர் நாட்டு மக்கள் உணர முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படும் அளவுக்கு நான் பைத்தியக்காரன் அல்லன. ரணிலிடம் இருப்பது லிபரல் கொள்கை. என்னிடம் இருப்பது சுதேச கொள்கை. வெளிநாட்டு கடன்களை செலுத்த ஆரம்பித்த பிறகுதான் நாட்டுக்கு என்ன நடந்துள்ளது என்பது தெரியவரும். அடுத்து யார் ஜனாதிபதியானாலும் குறுகிய காலப் பகுதிக்குள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக்கட்சி போட்டியிடும். நீதிமன்ற தீர்ப்பு கிடைப்பதில் தாமதம் ஏற்படின் மாற்று சின்னத்திலேயே களமிறங்க வேண்டிவரும் - என்றார். (அ)

## சஜித்தை...

தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நிலவி வரும் நட்புறவு, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் அவ்வாறே பேணப்படும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்தார்.

மீண்டும் ஒருமுறை இந்தியப் பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் ஆற்றிய பங்களிப்பு குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நெருங்கிய உறவைப் பேணத் தயாராக இருப்பதாகவும், நட்பை மேலும் வளர்த்துக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார். (அ)

## ரணில்...

ஆகியோருக்கு இடையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரை தவிர வேறு எவரும் இந்த சந்திப்பில் கலந்துகொள்ள அனுமதியளிக்கப்படவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலை ஒருவருடத்துக்கு ஒத்திவைக்கும் முயற்சியில் ஐ.தே.க ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகிவரும் பின்புலத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு குறித்து இதன் போது வஜித அபேவர்தன விஜித ஹேரத்திடம் வினவியதாக தெரியவருகிறது.

என்றாலும், ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்க ஒருபோதும் தேசிய மக்கள் சக்தி அனுமதிக்காது என்பதுடன், அவ்வாறான முயற்சிகள் இடம்பெற்றால் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பலைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கொள்ள நேரிடும் என விஜித ஹேரத் எச்சரித்துள்ளார்.

கடுமையான வாக்குவாதங்களுடன் இந்த சந்திப்பு நிறைவு பெற்றதாகவும் தெரியவருகிறது. (அ)

## இந்திய...

உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின், இலங்கை விஜயத்தின் உண்மை நோக்கமென்ன என்பதை அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும் என அவர் வலியுத்தினார்.

குறைந்த மணித்தியாலங்களை கொண்ட விஜயமாக இது அமைந்துள்ளதாகவும், இவ்வாறு திடீர் ஏன் அமைய வேண்டும் எனவும் இதன் பின்னணி என்ன எனவும் அவர் சபையில் கேள்வியெழுப்பினார்.

மேலும், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இவ்வாறான நிலையில் இந்திய வெளியுறவு அமைச்சரின் துரித விஜயத்தின் நோக்கம் என்ன என அவர் மீண்டும் கேள்வியெழுப்பினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் கடன்நிலைதன்மை தொடர்ந்தும் சீனா ஆதரவளிக்கும்!

பீஜிங், ஜூன் 21

**இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கும் கடன் நிலைத்தன்மைக்கும் தொடர்ந்து ஆதரவளிக்கப்போவதாக சீனா தெரிவித்துள்ளது.**



சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லின் ஜியான் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவின் எக்சிம் வங்கிக்கும் சீனாவின் அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் இறுதி உடன்பாட்டை எட்டும் விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சீனா தன்னால் முடிந்தளவுக்கு இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு தனது ஆதரவை வழங்கிவருகின்றது என்று தெரிவித்துள்ள அவர் இலங்கையின் கடன் பேண்தகு தன்மைக்கு ஆதரவளிப்பதற்காக உரிய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி அமைப்புகளுடன் இணைந்து செயல்பட தயார் என்றும் கூறியுள்ளார். (ஐ)



## மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார் ஜெய்சங்கர்

கொழும்பு, ஜூன் 21

உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் நேற்றைய தினம் பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எம். பியை நேற்று சந்தித்தார்.

இந்த சந்திப்பில் இந்தியா - இலங்கை இரு தரப்பு ஒத்துழைப்பின் தற்போதைய முன்னேற்றம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை - இந்திய இரு தரப்பு ஒத்துழைப்புக்காக முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தொடர்ச்சியான ஆதரவை பாராட்டுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## பிரதமர் தினேஷுடன் ஜெய்சங்கர் சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 21



உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் நேற்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்தார்.

இது தொடர்பில் ஜெய்சங்கர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டவை வருமாறு,

இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்தமையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். அபிவிருத்தி மற்றும் தொடர்புகளுக்கான முன்னெடுப்புகள் ஊடாக இந்தியாவின் வலுவான ஆதரவு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

எமது அபிவிருத்தி உதவிகள் மற்றும் ஆளுமை விருத்தி செயற்திட்டங்கள் ஊடாக இலங்கை மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படுமென நாம் நம்புகின்றோம் - என்றார். (ஐ)

## மதுபோதையில் இருந்தவர் வீடு தீப்பற்றியதில் மரணம்

கொழும்பு, ஜூன் 21

மதுபோதையில் வீட்டில் தனியாக இருந்தவர் வீடு தீப்பற்றி எரிந்ததில் உயிரிழந்தார்.

காலி - எல்பிட்டி - தலாவ பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், இரு பிள்ளைகளின் தந்தையான 48 வயது நபரே உயிரிழந்தார்.

குறித்த நபர் மதுபோதையில் இருந்த நிலையில் அதிகாலை வேளை மனைவியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். அத்துடன், மண்வெட்டியால் மனைவியையும் பிள்ளைகளையும் தாக்க முயன்றுள்ளார்.

இதனால், தாயும் இரு பிள்ளைகளும் அயல் வீட்டில் தஞ்சமடைந்திருந்தனர். இந்த நிலையில், உயிரிழந்த நபர் மதுபோதையில் தனியாக வீட்டில் இருந்துள்ளார். அந்தச் சமயம் அவர் இருந்த வீடு தீப்பிடித்து எரிந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அங்கு வந்தபோது அறை ஒன்றில் எரியுண்ட நிலையில் அங்கிருந்தவரின் சடலம் மீட்கப்பட்டது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கழுதைப்பாலில் இருந்து சீஸ், மருந்து உற்பத்தி!

### ஆய்வு செய்கிறது பேராதனை பல்கலைக்கழகம்

கொழும்பு, ஜூன் 21



கழுதைப்பாலில் இருந்து சீஸ் உள்ளிட்ட சத்தான உணவு மற்றும் தோல் நோய்களுக்கான மருந்து களை உற்பத்தி செய்வது தொடர் பில் ஆய்வுகளை பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள் ளது.

பேராதனை பல்கலைக்கழகத் தின் கால்நடை மருத்துவ பீடம், விஞ்ஞான பீடம் மற்றும் மருத்துவ பீடம் என்பன இணைந்து இந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன.

கிளியோபாட்ரா போன்ற அழகி கள் தங்கள் அழகை மேம்படுத்த கழுதைப்பாலை பயன்படுத்தினர் என்று வரலாற்றில் குறிப்பிடப்பட் டுள்ளதாகவும் அந்த பாலை அடிப் படையாகக் கொண்டு வாத நோய்களை தடுக்கும் தைலங்களை தயாரிப்பதற்கான சாத்தியக்கூறு களை மருத்துவ பீடத்தை தொடர்பு கொண்டு ஆராய திட்ட மிட்டுள்ள தாகவும் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி அசோக தங்கொல்ல தெரிவித்தார்.

கழுதைப்பாலின் ஊட்டச்சத்து தாய்ப்பாலைப் போன்றே உள்ளது. அதனை பயன்படுத்தி தயாரிக்கப் படும் பாலாடை கட்டிக்கு உலகில் அதிக தேவை உள்ளது.

பேராதனை பல்கலைக்கழக கால்நடை மருத்துவ பீடத்துக்கு கொண்டு வரப்பட்ட நன்கு வளர்ந்த கழுதை களில் ஒன்று ஒரு நாளைக்கு சுமார் 5 கிலோ புல் சாப்பிடு கின்றது. கழுதை ஒன்றிடமிருந்து பெறப்படும் பாலின் அளவு மாடு ஒன்றிடமிருந்து பெறும் பாலின் அளவை விட குறைவாகும்.

கழுதைப் பாலை அடிப்படையாக கொண்டு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. தொன்மையான கழுதைகளை பாதுகாக்க ஒரு குறிப்பிட்ட திட்டம் தேவை என விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் கருத்து தெரிவித்துள்ளன.

மேலும், சில பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்தா விட்டால், இன்னும் பல ஆண்டுகளில் கழுதைகள் அழிந்து விடும் எனவும் பேராசிரியர் இதன்போது சுட் டிக்காட்டினார். (ஐ)

## செயற்கை அவயவங்கள் பொருத்தும் முகாம் நிறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்கை அவயவங்கள் பொருத்தும் முகாம் நேற்று முன்தினம் நிறைவுபெற்றது.

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்றை அவயவங்கள் பொருத்தும் முகாமின் நிறைவு விழா வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளியும் பங்கேற்றார்.

இதில், செயற்கை அவயவங்கள் தயாரிப்பில் ஈடுபட்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த முகாமில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 352 மாற்றுத் திறனாளிகளுக்கு 366 புதிய செயற்கை அவயவங்கள் தயாரித்து வழங்கப்பட்டன. அத்துடன், பராமரிக்கும் முறை தொடர்பான பயிற்சிகளும் இந்த விசேட முகாம் ஊடாக வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## சிறைக் கைதிகளை பார்வையிட அனுமதி!

கொழும்பு, ஜூன் 21

பொசன் பௌர்ணமியை முன்னிட்டு இன்று முதல் இரு நாட்கள் சிறைக்கைதிகளை பார்வையிட அவர்களின் உறவினர்களுக்கு அனுமதி அளிக்கப்படும் என்று ஆணையாளரும் பேச்சாளருமான காமினி பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்போது, கைதிகளின் உறவினர்கள் கைதிகளுக்கு உணவு மற்றும் இனிப்பு பொதிகளை கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

சிறைச்சாலை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப, முறையான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளின்படி பார்வையாளர்கள் வர வேண்டும் என்று ஆணையர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## போதைப்பொருட்களுடன் தேரர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 21

கம்பஹா ரயில் நிலையத்தில் பொது மலசலகூடத்துக்கு அருகில் போதைப்பொருளுடன் இரண்டு தேரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கணேமுல்லை பிரதேசத்தில் உள்ள விகாரையொன்றில் வசிக்கும் 20 மற்றும் 25 வயதுடைய பிக்குகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் கொழும்பு பிரதேசத்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்று வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களிடம் இருந்து 220 மில்லி கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. கைதானோரை கம்பஹா நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.